**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம்–கண் பார்வையற்றவர்களுக்காக, முதற்கட்டமாக, சென்னை மாவட்டத்தில் உள்ள பொதுச் சாலைகளில், சாலை கடப்பதற்கான நிறுத்தங்களில் குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் அமைப்பதற்கு ரூ.75.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.52

நாள்:01–09-2014
ஜய, ஆவணி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:-

1. அ.சா.கு எண்.13753/மா.தி.ந.3/2013–5, நாள் 27.05.2014.
2. நிதித் துறையிடமிருந்து பெறப்பட்ட 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்ட பட்டியல்

------

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்திற்கென சமர்ப்பித்த கருத்துருவில், கண் பார்வையற்றவர்களுக்காக, முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் உள்ள பொதுச் சாலைகளில், சாலை கடப்பதற்கான நிறுத்தங்களில், குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் அமைப்பது குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995, அத்தியாயம்–8, "பாரபட்சமின்மை", பிரிவு–45 ''சாலைகளில் பாரபட்சமின்மை'' தலைப்பு உட்பிரிவு (a)ன் கீழ் – ''**பார்வை குறைபாடு உடையவர்கள் பயன்பெறும் வகையில், பொது சாலைகளில் உள்ள சிகப்பு விளக்குகளில் சப்தத்துடன் கூடிய சமிக்ஞைகளை அமைக்க வேண்டும்**'' என கூறப்பட்டுள்ளது எனவும், எனவே, அதனடிப்படையில் கண் பார்வையற்றவர்களுக்காக, முதற்கட்டமாக, சென்னை மாவட்டத்தில் உள்ள பொதுச்சாலைகளில் உள்ள போக்குவரத்து சாலை சந்திப்புகளில், குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் அமைக்கும்பட்சத்தில் பார்வையற்றவர்கள்/பார்வை குறைபாடுயுடைவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என தெரிவித்து சென்னையில் உள்ள 150 போக்குவரத்து சந்திப்புகளில், ஒரு சந்திப்பிற்கு ரூ.50,000/– வீதம் 150 சந்திப்பிற்கு ரூ.75,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று,கண் பார்வையற்றவர்கள், பார்வை குறைபாடுயுடையவர்கள் சிரமமின்றி போக்குவரத்து நிறுத்தங்களில் சாலையை கடப்பதற்கு ஏதுவாக, சென்னையில் முதற்கட்டமாக 150 போக்குவரத்து நிறுத்தங்களில் ஒரு சந்திப்பிற்கு (ஒரு சாலை கடப்பானுக்கு

ரூ.25,000/– வீதம், ஒரு சந்திப்பிற்கு 2 கடப்பான்கள்) ரூ.50,000/– வீதம் 150 சந்திப்பிற்கு குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் ரூ.75,00,000/– (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) செலவினத்தில் அமைத்திட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. . மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் 02– சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம்–JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம்–19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்.
(த.தொ.கு.2235–02–101–JH–1914)

4. மேற்காணும் இத்திட்டத்தினை மாநகர காவல் ஆணையருடன் கலந்தாலோசனை செய்து இச்செலவினத்தை இந்நேர்வுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், செலவினம் மேற்கொள்ளாமல்/மீதித் தொகை ஏதேனும் இருப்பின் அதனை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.31903/நிதி(சந)/14, நாள்16.6.14–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
காவல் ஆணையர், வேப்பேரி, சென்னை–07.

**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.